மக்கங்கள், எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 16 செவ்வாய்க்கிழமை (03-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily சுதிர் 313

# அச்சுவேலி - நிலாவரையில் தொடர்ந்து கடும் சண்டை!

## ஞாயிறன்று மட்டும் 19 படையினர் பலி

### 7 அதிகாரிகள் உட்பட 75 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 3

அச்சுவேலி – நிலாவரைப் பகுதியை நோக்கி முன்னேற முயலும் ஸ்ரீலங்காப் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று இரண்டாவது நாளாக உக்கிரச் சண்டை இடம்பெற்றது.

முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் தாக்குதலில் 19 படையினர் உயிரிழந்தனர் என்றும், ஏழு அதிகாரிகள் உட்பட 75 படையினர் படுகாயமுற்றனர் என்றும் ஸ்ரீலங்கா அரசுத் தரப்பு ஒப்புக்கொண்டது.

பெருந்த எடுப்பில்— பெரும் எண்ணிக்கையான படையினருடன்— கவச வாகனங்கள் சகிதம்— இந்த நடவடிக்கையை ஆரம்பித்திருந்த ஸ்ரீலங்காப் படைகள், இரண்டுநாள் சண்டையில் புலிகளின் பேரெதிர்ப்பை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 2 ஆவது நாளாக அகோர ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், ஒக். 3

வலிகாமம் கிழக்குப் பகுதிகள் மீது நேற்று இரண்டாவது நாளாக படையினர் அகோர ஷெல் தாக்குதல்களை நடத்தினர். அதே வேளை பலாலி முகாமில் இருந்து வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களால் வலிகாமம், தென்மராட்சி ஆகிய பகுதிகள் அதிர்ந்த வண்ணம் இருந்தன.

படையினர் ஏவிய ஷெல்கள் கோப்பாய், நீர்வேலி, புத்தூர், சிறுப்பிட்டி, ஆவரங்கால், நவக்கிரி பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இரண்டாவது நாளாகத் தொடர்ந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் உடைமைகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. பல இடங்களில் வீடுகள் சேதமடைந்துள்ளன.

வலி. கிழக்குப் பகுதிகளில் இருந்து பெரும் எண்ணிக்கையில் மக்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளதால் ஷெல் வீச்சுக்களினால் பெரும் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை எனினும் நேற்றைய தாக்குதக்க

(7 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய ஷெல் வீச்சில் காயமடைந்த மூவர் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 3

வலிகாமம் கிழக்குப் பகுதிகள் மீது இரண்டாவது நாளாக நேற்று படையினர் நடத்திய ஷெல்தாக்குதல்களில் காயமடைந்தவர்களில் மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களின் விவரம் வருமாறு:-

★ சந்தையா சிவக்கொழுந்து [வயது 60] — புத்தூர் கிழக்கு இவருடன் இவரது கணவர், மற்றும் சில வயோதிபர்களும் காயமடைந்தனர். அவர்களின் விவரங்கள் தெரியவரவில்லை.

★ அருளன் ரஞ்சன் [வயது 26] நீர்வேலி

★ பாலசிங்கம் குமணன் [வயது 18] நீர்வேலி

நேற்றைய ஷெல் வீச்சுக்களில் காயமடைந்த மேலும் சிலர் தென்மராட்சி பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

[ஐ-13-15]

# ஆயிரக்கணக்கில் மக்கள் நேற்றும் இடம்பெயர்வு!

## தென்மராட்சி நோக்கிச் செல்கின்றனர்

யாழ்ப்பாணம், ஒக். 3

வலிகாமம் கிழக்குப் பகுதி மீது படையினர் தொடர்ந்து நடத்தி வரும் ஷெல் தாக்குதல்களால் அப்பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் தொடர்ந்து இடம் பெயர்ந்து வருகின்றனர்.

அகப்பட்ட பொருள்களை எடுத்துக் கொண்டு நூற்றுக் கணக்கான குடும்பங்கள் நேற்றும் தென்மராட்சிப் பகுதியை நோக்கிச் சென்றதைக் காண முடிந்தது.

பெண்கள், குழந்தைகள், [illegible]

[8 ஆம் பக்கம் பார்க்க]

## ஸ்ரீமாவோ சிம்பாப்வே செல்வார்

கொழும்பு ஒக். 3

இம் மாதம் 21 ஆம் திகதி சிம்பாப்வேயின் தலைநகரான ஹராரேயில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் மாநாட்டில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் கலந்து கொள்வார்.

1976 ஆம் ஆண்டு அணி

[8 ஆம் பக்கம் பார்க்க]

## அச்சுவேலி - நிலாவரையில் "இடிமுழக்கத் தாக்குதல்"

கொழும்பு, ஒக். 3

வலிகாமம் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் காலையில் படையினர் ஆரம்பித்துள்ள இராணுவ நடவடிக்கைக்கு "இடிமுழக்கத் தாக்குதல்" (Thunder Strike) எனப் பெயரிடப்பட்டிருப்பதாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையில் 7 ஆயிரத்து 500 துருப்புக்களைக் கொண்ட 3 படைப்பிரிவுகள் ஈடுபட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

(உ-8)

## படை நடவடிக்கைக்கு மழையால் பாதிப்பாம்!

கொழும்பு, ஒக். 3

குடாநாட்டில் வலி. கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் படை நடவடிக்கை மழை காரணமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

மழை காரணமாக நிலக்கண்ணிவெடிகளையும், சக்திவாய்ந்த டாங்கிகளையும் படையினரால் பயன்படுத்த முடியாதிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வலி கிழக்கில் சில இடங்கள் உட்பட குடாநாட்டின் பல பகுதிகளில் நேற்று மழை பெய்தது.

[ஐ-3]

## குடாரப்பு கடற்கரையில் சுப்பசோனிக் குண்டு வீச்சு!

தென்மராட்சி, ஒக். 3

வடமராட்சி கிழக்கு குடாரப்பு கடற்கரைப் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இரு சுப்பசோனிக் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

கடலை அண்டிய பகுதிகளில் குண்டுகள் விழுந்து வெடித்தன. இத் தாக்குதலினால் பெரும் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளை — நேற்றுக் காலை 6 40 மணியளவில் வந்த இரண்டு சுப்பசோனிக் விமானங்கள் வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி பகுதிகளைச் சுற்றி வட்டமிட்டுச் சென்றன. (ஐ-31-117)

### அவ்ரோ நோட்டம்

நேற்று நண்பகல் 11. 50 மணியளவில் வந்த அவ்ரோ விமானம் ஒன்று வடமராட்சி வடக்கு, கிழக்குப் பகுதிகளைப் பல தடவை சுற்றி நோட்டமிட்டது.

மாமுனை, குடாரப்பு நாகர்கோவில் மணற்காடு போன்ற பகுதிகளை மையமாக வைத்து அவ்ரோ வட்டமிட்டு நோட்டமிட்டது.

## தீவிர அரசியலுக்கு குரேயை மீண்டும் இழுக்க முயற்சி

கொழும்பு, ஒக். 3

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் சிறிசேன குரேயை மீண்டும் தீவிர அரசியலுக்குள் இழுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக 'சண்டே ரைம்ஸ்' வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கட்சியில் உள்ள சில சிரேஷ்ட உறுப்பினர்களின் ஆதரவுடன் அநுரா பண்டாரநாயக்கவே இந்த முயற்சியில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் முன்னாள் சபாநாயகர் எம் எச். முஹம்மது

[8 ஆம் பக்கம் பார்க்க]

## ஆஸ்பத்திரிகளுக்கு மருந்து ஹபரணவில் இன்று வரும்

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ். ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான ஒரு தொகுதி மருந்து வகைகளுடன் "ஹபரண" கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வரவுள்ளது.

திருகோணமலையில் இருந்து நேற்று மாலை பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்ட இக்கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வரும் என்றும் — பின்னர் நாளை மறுதினம் இக்கப்பல் திருமலைக்குத் திரும்பிச் செல்லும் என்றும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவ நடவடிக்கைகள் குறித்து தூதர்களுக்கு அனுருத்த விளக்கம்

கொழும்பு, ஒக். 3

வடபகுதியில் தற்போது மேற்கொள்ளப்படும் ராணுவ நடவடிக்கை குறித்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

கடந்த ஞாயிறன்று ராணுவ நடவடிக்கைகள் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டதும் அமைச்சர் அனுருத்த பௌத்த தேரர்களைச் சந்தித்து அது பற்றி விளக்கமளித்தார் என "டெய்லி நியூஸ்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை அடுத்த மூன்று மாதங்களில் முடிவுக்குக் கொண்டுவர அரசு எதிர்பார்த்துள்ளதாக பௌத்த தேரர்களிடம் அவர் கூறியுள்ளார்.

அரசியல் செயற்பாடு அற்ற வெறும் இராணுவ வெற்றி நீடித்து நிலைக்காது என்றும் எனவே இறுதியாக அரசியல் தீர்வு ஒன்று அவசியமானது என்றும் அமைச்சர் அனுருத்த விளக்கமளித்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-6)

## புலிகளின் குரல் வானொலியில்

03 - 10 - 1995

செவ்வாய் இரவு

★ 8-02 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
★ 8-10 — அறிந்துகொள்ளுங்கள்
★ 8-20 — நலந்தானா— "மருந்துகள் என்பன பிரயோசனமான நஞ்சுகள்"
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக்களம் — இ. இராஜேஸ்வரன் எழுதிய 'சிந்தனைகள்',
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

04 - 10 - 1995

புதன் காலை

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து நீங்கள் கேட்டவை

## தமிழீழ வானொலியில்

செவ்வாய் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — தமிழிசை
★ 5-30 — வானொலி மதியூகம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விளாடிகள்
★ 6-02 — என் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள் தொடர்ந்து இவ்வாரம் இவர்


A/L 96
Day Classes
கணித, உயிரியல்
மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம்:
5— வியா. 8 மணி
தொடக்கம்:
1 p m. வரை
அனுமதிகள்
வழங்கப்படுகிறது.
P.N. SCIENCE CENTRE
யாழ்ப்பாணம்.
(சி-2388)


சலுகைகளைப்பெற வசதியாக:

## படையினர் குடும்பங்களுக்கு விசேட அடையாள அட்டை

கொழும்பு, ஒக். 3

வடக்கு - கிழக்கு யுத்தமுனைகளில் பணியாற்றும் படையினரின் குடும்பங்களுக்கு விசேட அடையாள அட்டைகளை அரசு வழங்கவுள்ளது.

இந்த அட்டையைப் பயன்படுத்தி படையினரின் குடும்பத்தினர் தமது பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்த்தல், ஆஸ்பத்திரிகளில் மருந்து எடுத்தல், அரசதுறையில் வேலை வாய்ப்புப்பெறல் ஆகியவற்றில் முன்னுரிமைச் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

படையில் ஆட்கள் சேர்வதை ஊக்குவிக்கவே அரசு இந்த உத்தியைக் கையாள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-3)

## முன்னாள் அமைச்சர்கள் 12 பேரை ஜனாதிபதி ஆணைக்குழு விசாரிக்கும்

கொழும்பு, ஒக். 3

கடந்த ஆட்சிக்கால பயங்கரவாதம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 12 முன்னாள் அமைச்சர்களை ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை செய்யவுள்ளது.

இவர்கள் ஆட்களைக் கடத்திச் சென்றமை, கொலை செய்தமை போன்ற 25க்கும் அதிகமான சம்பவங்களோடு தொடர்புடையவர்கள் என்றும், சாட்சிகளை விசாரணை செய்யும்போது சிலரது பெயர்கள் பலமுறை வெளிவந்ததாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அமைச்சர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய இராணுவ, பொலீஸ் உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றும் தற்போது கிடைத்துள்ளதாகவும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடத்தல், கொலையுடன் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளுக்கு உடந்தையாயிருந்த பொலீஸ், இராணுவ அதிகாரிகள் சிலர் பதவி உயர்வுகளையும் பெற்றுள்ளனர்.

ஆணைக்குழு முன் அழைக்கப்படவுள்ள இந்த அதிகாரிகள் மீதும் பூரண விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என அறிய வருகிறது.

இதேவேளை, கடந்த அரசின் பிரபல அரசியல்வாதி ஒருவருக்கெதிரான ஒரு வழக்கில் சாட்சியம் அளிக்க முன்வந்த இளைஞர்கள் சிலர் காணாமல் போன சம்பவம் தொடர்பாகவும், இதில் சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரிகள் தொடர்பாகவும் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-ஏ)

### மற்றொருவரும் பலியானார்

யாழ்ப்பாணம், ஒக். 3

வலி கிழக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ராணுவ நடவடிக்கையின் போது ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

கோப்பாய் வடக்கு யூனியன் பேக்கரியில் விழுந்த ஷெல்லினால் படுகாயமடைந்து இரண்டு கண்களையும் இழந்த திருமலை வாசியான காத்தமுத்து அமிர்தச்சந்திரன் (வயது 46) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். இவர் யூனியன் பேக்கரி தொழிலாளியாவார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஷெல்வீச்சு சம்பவங்களில் இறந்தோரின் எண்ணிக்கை ஏழாக அதிகரித்துள்ளது.

(ஓ-15)

## கூட்டுறவுக் கடைகளில் பொருள் விலை வித்தியாசம்

### வாடிக்கையாளர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 3

வாணி விழாவை முன்னிட்டு பொது மக்களின் நலன் கருதி யாழ் செயலகம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கிய பொருள்கள் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக புகார் கூறப்படுகிறது.

அனைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சம விலையிலேயே இப் பொருள்களை யாழ். செயலகம் வழங்கியது.

எனினும் கூட்டுறவுச் சங்கங்கள் வெவ்வேறு விலைகளிலேயே பொருள்களை விற்பனை செய்கின்றன என்று வாடிக்கையாளர் முறையிடுகின்றனர்.

மக்கள் இது பற்றிக் கேட்டபோது தலைமைச் சங்கத்தின் பணிப்பின் பேரிலேயே தாம் அந்த விலைகளில் விற்பனை செய்வதாக கிளை முகாமையாளர்களால் தெரிவிக்கப்பட்டதாம்.

(ஓ-ஏ-15)

யாழ். நிலைமை தொடர்பாக

## ஜனாதிபதியைச் சந்திக்க 5 தமிழ்க் கட்சிகள் முடிவு

கொழும்பு. ஒக். 3

யாழ்ப்பாண நிலைதொடர்பாகவும், அங்கு பொதுமக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் தொடர்பாகவும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஐந்து தமிழ்க்கட்சிகள் ஜனாதிபதியை விரைவில் சந்திப்பதற்கு முடிவு செய்துள்ளன.

இ. தொ. கா., மலையக மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. டி. பி, ஈ. பி. ஆர். எல். எவ். ஆகிய கட்சிகள் இது பற்றி கடந்த வெள்ளிக்கிழமை மாலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தின.

(ஓ-ஏ)

### வாணி விழா

யாழ்ப்பாணம். ஒக். 3

யாழ். மாநகராட்சி மன்ற சைவ விவகாரக் குழுவும், சுகாதாரப் பகுதி நலன்புரிச் சங்கமும் இணைந்து நடத்தும் வாணி விழா இன்று செவ்வாய் பிற்பகல் 2 மணி முதல் நாவலர் கலாசார மண்டபத்தில் மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

(ஐ)

### படையினரிடம் சிக்கிய 6 பேர் இன்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

பலாலியில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் ஆறு பேர் இன்று விடுவிக்கப்பட விருப்பதாகத் தெரியவருகிறது.

படையினர் முன்னேறிய பகுதிகளுக்குள் சென்ற சமயம் அவர்களிடம் சிக்கியவர்களே விடுவிக்கப்படவுள்ளனர்.

இன்று இவர்கள் 'ஹபரண, சப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்து வரப்படுவர் எனத்தெரியவந்தது.

(ஐ-3)

### சமூக ஒளி சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ் பல்கலைக் கழக சமூக விஞ்ஞான மன்றத்தின் "சமூக ஒளி" சஞ்சிகையின் 5 ஆவது இதழ் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

(ஐ)

## தாலிக்கொடி, நகை, பணம் பேர்ஸுடன் பறிபோனது!

### இளாலிக் கரையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 3

கொழும்பிலிருந்து இளாலியூடாக வந்த பெண் ஒருவர் தாலிக்கொடி மற்றும் நகைகள் பணம் என்பவற்றுடன் கூடிய தமது பேர்ஸை இளாலிக் கரையில் பறி கொடுத்தார்.

அண்மையில் இந்தப் பெண் பறிகொடுத்த நகைகள் மற்றும் பணத்தின் மொத்தப் பெறுமதி சுமார் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது.

தமது மகளின் திருமணத்துக்கு எடுத்து வந்த தாலிக்கொடி, நகைகளே திருட்டுப் போய் விட்டன என்று அந்தப் பெண்மணி காவல் துறையில் முறையிட்டுள்ளார்.

வேலணையைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், தற்பொழுது கொழும்புத்துறையில் வசித்து வருகிறார்.

(ஓ-117-30)

### அனுமதி அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 3

எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள நெசவு போதனாசிரியர் தெரிவுப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

### மலேசிய ஓய்வூதியர்களுக்கு

யாழ்ப்பாணம், ஒக். 3

மலேசிய நாட்டு ஓய்வூதியம் பெறுவோரின் விபரங்களை கேள்விக் கொத்து மூலம் மலேசிய அரசாங்கம் கோரியுள்ளதாக யாழ். செயலகம் அறிவித்துள்ளது.

இதற்கான படிவங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் —

மலேசிய ஓய்வூதியம் பெறுவோர் அவற்றைப் பூரணப்படுத்தி தமது பாஸ்போட் படம் அளவிலான அண்மைய புகைப்படம் ஒன்றுடன் இணைத்து எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன் செயலக ஓய்வூதியக் கிளைக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## மற்றொரு அணுகுண்டை பிரான்ஸ் பரிசோதித்தது

பாரிஸ் ஒக். 3

பிரான்ஸ் அதன் அணுகுண்டுப் பரிசோதனைத் தொடரில் இரண்டாவது பரிசோதனையை தென் பசிபிக்கில் உள்ள பங்கதோவா [illegible] 110கிலோ தொன்னுக்கும் குறைவான இந்த அணுகுண்டு நிலத்தின் கீழ் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணியளவில் வெடிக்க வைக்கப்பட்டது.

5.5 அளவிலான பூமி நடுக்கத்துக்கு இந்த அணுகுண்டு வெடிப்பு சமமானதாகும் என்று அமெரிக்கப் புவியியல் ஆய்விலிருந்து தெரிய வந்திருக்கிறது.

(இ-ஏ)


சமூக அறிவியல்
பொது அறிவுத்தேர்வு - 95

நயினாகரம் 3 ஆம் ஆண்டு நிறைவையொட்டிய பொது அறிவுத்தேர்வு புதன் (04-10-95) பிப. 3-00 — 4-00 மணிவரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

★ இதுவரை பரீட்சைக்கு விண்ணப்பிக்காத ஆர்வலர்களும் இப்பரீட்சையில் கலந்துகொள்ளலாம். சமூகமளிக்கும்போது ஆனி 95 இதழுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து வருதல் வேண்டும்.

தங்கப்பதக்கம் உள்ளிட்ட
பரிசுப்புதையல் உங்களுக்காக
(சி/2401)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர்கள் சிபார்சு

கொழும்பு, ஒக். 3

கிழக்கு மாகாண பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு மூவரின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சந்தானத்தின் பதவிக்காலம் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

புதிய துணைவேந்தரை தெரிவு செய்வதற்காக 17 பேரைக் கொண்ட கிழக்கு பல்கலைக்கழக கவுன்சில் கடந்த சனியன்று கூடியது.

இக் கூட்டத்தில் ஐவரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டு இரகசிய வாக்கெடுப்புக்கு விடப்பட்டு அவர்களில் மூவரின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டன.

விஞ்ஞானபீடாதிபதி பேராசிரியை செல்வி மனோ சபாரத்தினம், விவசாயபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். ரவீந்திரநாத், வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி எம். எஸ் ரகுராகவன் ஆகிய மூவரின்பெயர்களே சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

(ஒ-ஐ

## கடலுக்குள் விழுந்த அன்ரனோவை இவ்வார முடிவுக்குள் மீட்டு விடலாம்

### 'மாஸ்ரர் டைவர்ஸ்' நிறுவனத் தலைவர் நம்பிக்கை

கொழும்பு, ஒக். 3

அண்மையில் ஐா-எல கடலில் விழுந்த அன்ரனோவ் விமானத்தை இந்தவார முடிவில் கடலுக்குள் இருந்து மீட்டு விடலாம் என்று 'மாஸ்ரர் டைவர்ஸ்' நிறுவனம் நேற்று நம்பிக்கை வெளியிட்டது.

மீட்பு வேலைகளுக்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் பூர்த்தி அடைந்துள்ளன என்று அந்த நிறுவனத்தின் தலைவர் ஆரியசேன விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

செய்மதிக்கூடாகச் செயற்படும் கடற்படை உபகரணங்கள் சனிக்கிழமை சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன என்றும் —

உலோக வலை ஒன்றைப் பயன்படுத்தி கடலின் அடியில் காணப்படும் விமானத்தை மீட்பதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்றும் —

நான்கு பாரந்தூக்கும் கிறேன்களைப் பயன்படுத்தி விமானச் சிதைவுகள் வெளியே கொண்டுவரப்படும் என்றும் திரு. விக்கிரமநாயக்க கூறினார்.

சுமார் 15 தொன் எடையுள்ள இந்த விமானத்தின்சில பகுதிகள் ஏற்கனவே எடுக்கப் பட்டுள்ளதால் அதனை மீட்பது அவ்வளவு சிரமமாக இருக்காது என்று நிபுணர்கள் கருதுவதாக திரு. விக்கிரமநாயக மேலும் கூறினார்.

[ஒ-க]

## உயிரிழப்புகள் குறித்து அரச தரப்பு எப்போதாவது கவனம் எடுத்ததுண்டா?

### சுவாமி சித்ரூபானந்தா ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம் ஒக். 3

இன்றைய பாதுகாப்பு அமைச்சரோ, வெளிநாட்டு அமைச்சரோ அல்லது முன்னாள் ஜனாதிபதிகளோ யுத்தத்தில் இழக்கப்படும் உயிர்கள் குறித்து எப்பொழுதாவது கவனம் எடுத்ததுண்டா?

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அண்மையில் அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

பௌத்தமத குருமாரை விகாரைகளில் தங்கியிருந்து புத்த பிரானின் வதனத்தை உற்றுப் பார்த்து தியானிக்கச் சொல்லுங்கள் எனவும் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

மகஜரில் மேலும்கூறப்பட்டதாவது:

வடக்கில் இராணுவ முன்னேற்றம் என்பது ஒரு பிரமையேயாகும். இராணுவம் பிரமிச் ஷெல் அடித்தவாறே முன்னேறுகிறது. சாதாரண மக்கள் இத் தாக்குதலுக்கு முன் நின்று பிடிக்க முடியாது அவர்களும் ஓடுகின்றார்கள், இராணுவமும் ஓடுகின்றது. இராணுவத்தால் கைப்பற்றப் பட்ட இடம் இத்தகைய நிலைமையில் உள்ளது

பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண் என்பது காட்டுமிராண்டி சமுதாயத்தின் விதியாகும். ஆனால் நாம் கருணையின் அவதாரமான புத்த பிரான் காட்டிய அன்புவழியைக் கடைப்பிடிக்க வேண்டும். புத்தபிரானின் திருமுகத்தில் இந்தப் பிரபஞ்சத்தின் மனிதருக்கும் மற்றும் ஜீவராசிகளுக்கும் அன்பைப் பொழிவதைக் காண முடியும்.

மகா சங்கத்தினர் அரசியலில் ஈடுபடக் கூடாது. மத குருமார் அரசியலில் ஈடுபடுவது எமது நாட்டில் ஒரு சாபக்கேடாகும்.

செப்ரெம்பர் 22 ஆம் திகதி நடைபெற்ற ஷெல் வீச்சிலும் குண்டு பொழிவிலும் 40 பேர் உயிர் இழந்தனர். இவர்களுள் நாகர்கோயில் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பள்ளிப் பிள்ளைகளும் அடங்குவர்.

எமது சேவாச்சிரமத்துக்கு மிகவும் அண்மையிலேயே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 குழந்தைகள் அதே இடத்திலேயே கொல்லப்பட்டார்கள். இவர்களுடைய வீட்டுக்குப் பக்கத்து வீட்டு துஷ்யந்தி என்ற குழந்தையும் கொல்லப் பட்டார்.

நான் கடந்த பல ஆண்டுகளாக ஷெல் தாக்குதலைக் கண்டுள்ளேன். அண்மையில் பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்கள் எல்லாவற்றையும் மிஞ்சிவிட்டன.

ஒரு துறவி என்ற முறையில் நான் எப்பொழுதும் எல்லோரதும் நல்வாழ்வையே விரும்புகின்றேன்.

உயிர் இழந்தவர்களும் கால், கை இழந்தவர்களும் என்ன தவறு இழைத்தார்கள்? நாங்கள் தமிழராகப் பிறந்ததுதான் குற்றமா?

—சுவாமி சித்ரூபானந்தா இவ்வாறு தமது மகஜரில் கேள்வி எழுப்பியுள்ளார்.

(க)

## மீட்புப்பணி கஷ்டமாம்; ஆங்கில வாரஇதழ் கருத்து

கொழும்பு, ஒக். 3

ஐா-எல கடலில் வீழ்ந்த அன்ரனோவ் விமானத்தின் சிதைவுகள் கடலின் அடியில் எப்பகுதியில் கிடக்கின்றன என்பதைக் கண்டு பிடித்தாலும் அவற்றை கடலுக்கு வெளியே கொண்டு வருவது மிகக் கஷ்டமாக இருக்கும் என ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

விமானத்தின் சிதைவுகளை அவ்வளவு ஆழத்திலிருந்து மீட்டு எடுப்பதாயின் —

விமானப்படைக்கான ஒரு வருட பட்ஜெட் ஒதுக்கீட்டை அப்படியே அந்த மீட்புப் பணிக்கு வழங்க வேண்டியிருக்கும் என்றும் அப் பத்திரிகை மேலும் குறிப்பிட்டது.

கடல் தொடர்ந்து கொந்தளிப்பாகக் காணப்படுவதால் கடந்த புதன்கிழமை வரை விமானச் சிதைவுகள் கிடக்கும் இடத்தையோ, அதன் தற்போதைய நிலைமையையோ அறிந்து கொள்ள முடியவில்லை என்றும் அப் பத்திரிகை குறிப்பிட்டது. (உ)

## ஏனைய இரு அன்ரனோவ் விமானங்களும் சேவையில்

கொழும்பு, ஒக். 3

''அன்ரனோவ்'' விமானம் ஒன்று ஐா-எல கடலில் வீழ்ந்ததை அடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றைய இரு ''அன்ரனோவ்'' விமானங்களும் கடந்த வாரம் முதல் மீண்டும் தமது வேலையை ஆரம்பித்துள்ளன.

மேற்படி விமானங்களைத் தயாரித்த உக்ரைன் நாட்டு கம்பனியின் பிரதிநிதிகள் கொழும்புக்கு வந்து எஞ்சியுள்ள இரண்டு அன்ரனோவ் விமானங்களையும் அக்குவேறு ஆணிவேறாகப் பரிசோதித்து சகல கருவிகளும் நல்ல நிலையில் இருப்பதாக அறிவித்ததை அடுத்து —

அந்த இரண்டு விமானங்களும் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. [உ]

## 10 ரூபாவுக்கு சன்லைட்: ஆனால் அதை வாங்க...!

யாழ்ப்பாணம், ஒக். 3

ஒரு சன்லைட் சவர்க்காரம் பத்து ரூபாவுக்கு விற்பனையாகின்றது.

அரச வர்த்தக திணைக்களக் கடைகளிலேயே சவர்க்காரம் பத்து ரூபாவுக்கு விற்பனையாகிறது.

ஆனால் பத்து ரூபாவுடன் செல்லும் ஒருவர் அந்த சவர்க்காரத்தை வாங்க முடியாது.

50 ரூபாவுக்கு மேல் ஏனைய பொருட்கள் வாங்குபவர்களுக்கு மாத்திரமே இந்தச் சவர்க்காரச் சலுகை (ஒ-எ)

## 4 தமிழ் யுவதிகள் கைது

கொழும்பு, ஒக். 3

வவுனியா செல்வதற்காக கோட்டை ரயில் நிலையத்துக்குச் சென்றுகொண்டிருந்த நான்கு தமிழ் யுவதிகளை இடையில் பொலீஸார் கைது செய்தனர்.

இருபது வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்ட இந்த நான்கு யுவதிகளும் அதிகாலை வேலைசென்றுகொண்டிருந்தசமயம் கைது செய்யப் பட்டு வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் பணிக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ)

## தேரினிலே வந்து ஆட்கொள்வாய்

வன்னையிலே வந்துதித்த வேலவா - எமது
வல்வினைகள் போக்கிடுவாய் வேருடனே!

கார்மேகக் கண்ணனாக அவதரித்தே - மக்கள்
காரிருளைப் போக்கியவன் நீயன்றோ?

வேங்கடவா எம்முடனே கூடிநின்று - நமக்கு
வெற்றிதனைத் தந்திடுவாய் வெஞ்சமரில்!

பாரதத்தை நடத்திடவே பார்த்திபனானாய்
- எங்கள்

பாரத்தை ஏற்றிடவே பரம்பொருளானாய்

பாரினிலே பயமின்றி நாம் வாழ - தங்கத்
தேரினிலே வந்தெம்மை ஆட்கொள்வாய்!

வண்ணை சே. சிவராசா

[இன்று செவ்வாய்க்கிழமை
யாழ். பெருமாள் கோவில் தேர்த்திருவிழா]

## வாழ்வுக்கு ஆதாரம் ஒழுக்கமே!

இன்று ஒக்ரோபர் 3 சர்வதேச நல்லொழுக்க தினமாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

உயர்வான பண்பாடுகள் உடைய ஒரு சமூகத்தைக் கட்டி எழுப்ப ஒழுக்கமே சிறப்பாக உதவக் கூடியது. இங்கே ஒழுக்கம் என்பது மிகப் பரந்த நோக்கில் சிந்திக்கப்படும் எண்ணக்கருவாகும்.

மூத்தோரை மனம் நோகாமல் பாதுகாத்தல், சமூகக் கட்டுப்பாடுகளுக்கு மதிப்பளித்தல், முறையற்ற வாழ்க்கை முறைகளைக் களைவது, இயலாதவர்களுக்கு உதவியளிப்பது, சுயகட்டுப்பாடு, எல்லோருக்கும் மதிப்பளித்தல், தனது தேசத்தின் மீது பற்று வைத்தல், நல்ல சமய அற நெறிகளைக் கைக்கொள்ளல் — இவை எல்லாம் ஒழுக்கம் என்ற வரையறைக்குள் அடங்கும்.

மேற்கூறியவற்றைப் பேண எமது இளைய — புதிய சந்ததியினருக்கு மூத்தோர் வழிகாட்ட வேண்டும்.

எனவே ஒவ்வொருவரும் தன்னுடையதும் சமூகத்தினதும் முன்னேற்றத்திற்குப் பொருத்தமான ஒழுக்க விதிக்கோவை ஒன்றை விளங்கி, சிந்தித்து கட்டியெழுப்பிக் கொள்வதால் மனிதத் தன்மை மேலும் சிறப்புறும். இவ்வாறான குறிக்கோள்களைத் தீர்மானித்து ஒழுக்க விதிகளைக் கட்டியெழுப்புதல் தனியே கற்பனையாக மேற்கொள்ளக் கூடிய ஒன்றல்ல அத்துடன் ஒரு தொலைவினரின் ஈடுபாட்டுடன் நிகழக்கூடியதுமல்ல. எனவேதான் உலகளாவிய ரீதியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த பல பொதுஸ்தாபனங்கள் முயற்சி செய்து வருகின்றன.

பொதுவாக ஒவ்வொரு பிரதேசங்களிலும் கல்வியுடனும் சமுதாய வாழ்க்கையுடனும் தொடர்புடைய அனைவரும் நல்லொழுக்கங்களைக் கட்டியெழுப்பிக் கொள்வதில் பொறுப்புடையோராவர் இவ்வாறாக ஒழுக்க நெறிகளை உருவாக்க சமூக பொருளாதார சமயப் பின்னணிகளுடன் கடந்த கால அனுபவங்கள் கலாசார அம்சங்கள், எதிர்காலப் போக்குகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் பொதுவாக ஒழுக்கம் பற்றி சமயங்களே பெருமளவு போதித்தாலும் இன்று தத்துவமாக ஒழுக்கக் கல்வியும் போதிக்கப்படுகின்றது.

சட்டங்கள் மீறப்படுதல், குற்றச் செயல்கள் அதிகரித்தல், பாலியல் வன்முறைகள், போதைவஸ்துப் பாவனைகள், எயிட்ஸ் நோய் போன்றவை எல்லாம் ஏற்படக் காரணம் ஒழுக்கக் கேடேயாகும். எனவே இவற்றைத் தடுப்பதற்கு இள வயதிலேயே ஒழுக்கம் பற்றிய விழிப்புணர்வை பாடசாலை மூலமாகவும் சமூக, மத, நிறுவனங்கள் மற்றும் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் ஏற்படுத்தலாம்.

ஒவ்வொரு தனியாட்களும் அவரவர் திறன்கள், உள்ளார்ந்த சக்திகள் ஆகியவற்றின் ஊடாக ஒழுக்கமான வரையறைகளைத் தீர்மானித்து சமூக பண்பாட்டியல் அபிவிருத்தித் தேவைகளையறிந்து செயற்படும் போது பல பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடிகின்றது. இதைக் கருத்திற் கொண்டே தனியாளினதும் சமூகத்தினதும் முன்னேற்றத்துக்காகப் பொருத்தமான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு ஒக்டோபர் 3ஆம் திகதி ஒழுக்கநாளாக ஐக்கிய நாடுகள் நிறுவனத்தினூடாக உலகெங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதைக் கருத்திற் கொண்டு எமது பிரதேச கல்வி சமூகவியலாளர்கள் பல செயற்திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். இதற்குப் பொது மக்கள் அனைவரினதும் ஒன்றிணைந்த செயற்பாடுகள் அவசியமாகும்.

இவ்வுலகத்தை நேசிக்கும் ஒவ்வொருவரும் ரம்மியமான வாழ்க்கையை வாழ; ஒழுக்கமைப்பற்ற வழக்காறுகள், தீயசெயல்கள், மானிட நேயமற்ற சமுதாயவாழ்க்கை, ஒழுக்கம் பற்றிய எண்ணமில்லாத வாழ்வு என்பவற்றுக்கு [illegible]

- பா. தனபாலன் பி. ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி துணை
திருநெல்வேலி
அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

## கேதார கௌரி விரதாரம்பம்

அடியார்களே!

இன்று 03-10-95 [செவ்வாய்க்கிழமை] மேற்படி விரதம் ஆரம்பமாகி தொடர்ந்து 21 தினங்கள் நடைபெறும். இறுதிநாள் 23 - 10 - 95 (திங்கட்கிழமை) காலை 8-30 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் அம்பாள் வீதிவலம் வந்து அடியார்களுக்கு காலை 11-00 மணியளவில் காப்பு வழங்கப்படும்.

மு. கு:- கௌரிக்காப்பு எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் வந்து பதிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நன்றி.

இங்ஙனம்;
தேவஸ்தானம்

(38805)

ஸ்ரீ சாயி ராம்

31ஆம் நாள்

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் சின்னத்தம்பி
அம்பலவாணர் செல்வநாயகம்

(Ret. Chief Clerk Waldermar Group Udapusselawa
Ret. Clerk Jaffna Co-op - Society Ltd)
(செயலாளர் சத்திய சாயி சமித்தி, சித்தன்கேணி)

4-9-95இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி அறிந்தவுடன் எமது இல்லத்துக்கு வருகை தந்து இறுதி கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், எமக்கு ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும், நோயுற்ற நேரத்தில் யாழ். பொது வைத்தியசாலை வைத்தியர்களுக்கும், மற்றும் ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (4-10-95) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வினிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ஜெய் சாயிராம்

1. காலை 9-00 மணிககு வீட்டுக் கிருத்தியம்
2. 11-30 — 12-30 மணி பஜனை
3. 12-30 மணி பக்தி, போஜனம்

இங்ஙனம்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(8656)

31 ஆம் நாள்

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 20 — 08 — 1932

மறைவு: 04 — 09 — 1995

ஐயாத்துரை விசுவலிங்கம்
[பிரபல வர்த்தகர்]

நாளை [04 - 10 - 1995] அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி படைய பிரார்த்திக்கும்.

— குடும்பத்தினர்.

"விமல மகால்"
சரணவாய் தெற்கு, கரவெட்டி.

[38798]




இதோ! ஓர் அரிய சந்தர்ப்பம்

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்புப் பகுதியால்

நடத்தப்படும்

# மாபெரும் மரநடுகை வளர்ப்புப் போட்டி 1995 - 1996

சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், ஏனைய பொது அமைப்புகளுக்கு இடையேயான மரநடுகை வளர்ப்புப் போட்டியில் பங்குபற்றி தங்கப்பதக்கத்தை வெல்ல

முனைந்திடுவீர்

மேலும் பல ஆறுதல் பரிசில்கள்

மேற்படி அமைப்புக்களின் நிர்வாகிகளே, அங்கத்தவர்களே உங்கள் பிரதேசங்களை சோலைவனமாக்கி, சிறந்த சூழலைப் பேண ஆர்வம் கொண்டுள்ளீர்களா?

அப்படியாயின் நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்

இன்றே விரைந்திடுவீர்!

— உங்கள் அமைப்பின் சுற்றாடலில் வளரக்கூடிய 20 காட்டு மரக்கன்றுகளின் விவரத்தினை எமக்கு அனுப்பி வைக்கவும்.
— விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுமிடத்து சுமார் 5' உயரம் கொண்ட காட்டு மரங்கள் இலவசமாக வழங்கப்படும்.
— பராமரிப்பு தொடர் மதிப்பீடு செய்யப்பட்டு 1996 வருட இறுதியில் பரிசில்கள் கோட்ட மாவட்ட ரீதியில் வழங்கப்படும்
— போட்டிகளில் பங்குபற்றும் அமைப்புக்களுக்கு இலவசமாக விரும்பிய அடிப்படையில் சஞ்சிகைகள் / விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.
— மேற்படி போட்டிகளில் பங்குபற்றும் அமைப்புக்கள் யாழ். குடா நாட்டினுள் மட்டும் செயற்படுபவையாக இருத்தல் வேண்டும்.
— நடுவர்கள் தீர்வே இறுதியானது.

சுயமாக தயாரித்து விண்ணப்பப் படிவங்களை பின்வரும் முகவரிக்கு 10 - 10 - 1995க்கு முன் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

மத்திய சூழல் பாதுகாப்புப் பகுதி,
விவசாய சூழல் பாதுகாப்புப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு
நிறுவனம்,
தாவடி.

(சி-2398)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த வருடத்தில் இருந்து

# பாடசாலை நாள்கள் அதிகரிக்கும்; முடிவில் மாற்றம் எதுவும் இல்லை

கொழும்பு, ஒக். 3

அடுத்த வருடத்தில் இருந்து பாடசாலை நாள்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது என்று கல்வி அமைச்சால் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் மாற்றம் ஏற்படாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது ஒரு முக்கியமான நடவடிக்கையாகும் என்று கல்வி மான்களும் ஆசிரியர் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் அதிபர்களும் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஜப்பானில் மாத்திரமேஆகக் கூடுதலாக — 256 தினங்கள் பாடசாலை நாள்களாக இருந்து வருகின்றன. சீனாவில் 252 நாள்களும்கொரியாவில் 246 நாள்களும் பாடசாலை நாள்களாக இருக்கின்றன' அமெரிக்காவில்தான் ஆகக்குறைந்த நாள்கள் பாடசாலை நாள்களாக இருக்கின்றன. அங்கு 180 நாள்களே பாடசாலை தினங்களாகும்.

தேசியக் கல்விமுறை ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு பாடசாலை நாள்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று பல தொழிற் சங்கங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

நேரம் போதாமையால் சில பாடங்களுக்கான பாட விதானங்களைப்பூர்த்திசெய்ய முடியவில்லை. மாணவர்கள் ரியூஷன்வகுப்புகளுக்குப்போவதற்கான முக்கிய காரணமும் இதுவே என்று அவை கருதுகின்றன.

இந்த நடவடிக்கை மாணவரின் உரிமையை மீறும் செயலாகும் என்று சில தொழிற்சங்கங்கள் விவரித்துள்ளன. மூளைசாலித்தவம் திறமை உள்ளதாக இருந்தால் பாடசாலை நடைபெறும் தினங்களை அதிகரிக்கத் தேவையில்லை என்று அவை சுட்டிக்காட்டியுள்ளன. (ஓ-க)



## முடிவு நன்றே அமையட்டும்

தோற்றம் லானோ டமையட்டும்
துட்டச் செயல்கள் ஒழியட்டும்
ஆற்ற முடியாத் துயரினம்
அனைத்து மழிந்து போகட்டும்
போற்றி நின்றோம் பொன்னடி
புனைம் புலர்வு கண்டிட
மாற்ற மிங்கு மலரட்டும்
மண்ணி லமைதி நிலவட்டும்

அறிவுக் கனலே மூளட்டும்
அகிலம் எங்கும் சூழட்டும்
விடிவு எமக்குக் கிடைக்கட்டும்
வித்தை மண்ணில் பெருகட்டும்
அடிமை வாழ்வு ஒழியட்டும்
அன்பு நெறிகள் தளைக்கட்டும்
முடிவு நன்றே அமையட்டும்
முதல்வி வாணி காக்கட்டும்.

காரை. எம். பி. அருளானந்தன்

## தேவியே சரணடைந்தோம்

நாதியற்ற வராகி நாடெல்லாம் அலைகின்றோம்
பாதிப்பு மிக்கதனால் பதறித் துடிக்கின்றோம்
ஆதிக்கக் கொடுமைக்கு அடிமையாய் மாளுவதோ?
ஆதியான தாயுனக்குத் திருவுளச் சம்மதமோ?......

இன்பத் தமிழேயுந்தன் இனிய நடையெங்கே?
அன்பு வடிவத்தின் அருமைக் குணங்களெங்கே?
அன்னிய மொழிகலைகள் ஆளுமை செய்வதேனோ?
இன்னமும் பொறுக்கலாமோ திருவுளச் சம்மதமோ?...

தான்நினைத் தூட்டிவிடும் தாய்வடி வானவளே
தேனினு மினியவளே தேவியே சரணடைந்தோம்
மானினம் போன்றின்னும் மருளுதல் வேண்டாமம்மா
தானிடம் சேர்ந்து வாழத் தரணியில்
துணை நில்லம்மா......

— உரும்பிராய் கு. சிவபாலசுந்தரம்பிள்ளை.

## பாமகளைப் பாடு!

ஏடு தொடக்கி எழுதிப் படித்த பின்பு
நாடு புகழ நடந்திடுவீர் - நீயரடு
ஊருக் குதவி செய்து உத்தமனாய் வாழ்வதற்கு
பாருலகில் பாமகளைப் பாடு!

- கவிஞர் சித்தூர்ரத்தினம்.

## சர்வசக்தி தாரும் அம்மா!

சர்வ லோகநாயகியே! சர்வசக்தி தருபவளே!
சஞ்சலம் போக்கிடும் தாயே! நாதரூபமே!
உருப்பளிங்கு போல்பவளே! உன் அருளைத்
தாரும் அம்மா!
வீணையின் ஒலியில் உறைபவளே! சர்வசக்தி
தாரும் அம்மா!

— கு. சிவனேஸ்வரம்.

## சரண் புகுந்தேன் தாயே!

உனைப் பாடாத என் மனம் ஆறாது
என் பாடல் எப்போதும் உனைச் சேரும்
ஏழ் இசையாவும் நீ இன்றி எங்கு உருவாகும்
கண் திறந்து அருள் சுரந்து
மாணவர் வாழ்வுக்கு வழி திறந்து
வண்ணமா ஆய கலைகளையும்,
நீ தருவாய்.
உன் திருவடிக்குச் சரணமென்று
சரண் புகுந்தேன் தாயே!

— பலாலியூர் தம்பி — விஜய்.

## இளங்கலைஞர் மன்ற வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக். 3

இளங்கலைஞர் மன்றத்தின் வாணிவிழா நிகழ்ச்சி இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணி முதல் நல்லூர் சட்டநாதர்வீதி மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் மிருதங்க இசை, வயலின்இசை, பாட்டு, வீணையிசை, இசைக்கச்சேரி, சாஸ்திரிய மெல்லிசை, பரத நாட்டியம் ஆகியன இடம் பெறும்.

இசைக் கச்சேரியில் கலாநிதி பத்மநாதன் பாட்டும், சாஸ்திரிய மெல்லிசையில் திரு. என். பத்மலிங்கத்தின் பாட்டும் இடம் பெறும். (க)

## டிராக்டர் ஏறி படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக. 3

டிராக்டர் விபத்தொன்றில் டிராக்டர் மேலால் ஏறிச் சென்றதால் ஒருவர் படுகாயமடைந்தார்.

சாவகச்சேரி வடக்கில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த கே. கணபதிப்பிள்ளை (46 வயது) என்பவரே காயமடைந்தவர்ஆவார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் அவர் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஓ-15)

## இரு தரப்பும் தாக்குதலுக்கு தயாராகி வருகின்றனவாம்

கொழும்பு ஒக்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக பெரும் தாக்குதலுக்கு அரசுப் படைகள் தயாராகி வரும் அதேவேளை— அரசுப் படைகளுக்கு எதிராக பெரும் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகளும் தயாராகி வருகின்றனர்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கின்றது.

வெளிநாடுகள் பலவற்றில் உள்ள விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் பெருமளவு ஆயுதங்கள், வெடிமருந்துகள் மருந்து விநியோகப் பொருள்கள் ஆகியவற்றைப் பெற்றிருப்பதாகவும்—

ஸ்ரீலங்கா நோக்கி அனுப்பப்பட்டிருக்கும் இப் பொருள்கள் ஒக்டோபர் மாத முடிவு அளவில் போராளிகளின் பிரதேசத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டது (உ)

## தலைமன்னார், பேசாலை பகுதிகளில் திரளும் புலிகள்

கொழும்பு, ஒக். 3

மன்னாரில் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக தலைமன்னார் பேசாலை பகுதிகளில் விடுதலைப் புலிகள் பெரும் எண்ணிக்கையில் ஒன்று திரண்டு வருவதாக புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மன்னார் தமது முழுக்கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டால்—

வடக்கு- கிழக்கு துருப்புகளுக்கு மன்னார் கடல்பாதை மூலம் அனுப்பப்படும் ஆயுதம் மற்றும் பொருள்களின் விநியோகத்தை முற்றாகத் தடுக்க முடியும் என புலிகள் கருதுவதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டது. (உ)

## தபால்களை கப்பலில் அனுப்புவதற்கு ஏற்பாடு

### புதனுக்கு முன் தபாலில் சேர்க்குக!

யாழ்ப்பாணம், ஒக். 3

கொழும்பு மற்றும் வெளியூருக்கான கடிதங்கள் கப்பல் மூலம் அனுப்ப ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றமையினால் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை கப்பலுக்கு கடிதங்கள் எடுத்துச்செல்லப்படும்.


பொதுமக்கள் நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் தபாலகத்தை வந்தடையுமாறு தங்கள் கடிதங்களை தபாலில்சேர்க்குமாறுபிரதம அஞ்சல் அதிபர் திரு சு.கோடீஸ்வரன் கேட்டுள்ளார். (ஓ)


## விஜயதசமி இசை வகுப்புகள்

ஓகன்,
ட்றம்ஸ் இசை வகுப்புகள்
ஆரம்பம்: 03 - 10 - 1995
[விஜயதசமி அன்று]
மாலை 4 — 6 மணி வரை
ஸப்தஸ்வரா இசைமன்றம்
200/1 யாழ்வீதி,
அரியாலை.
(ஸ்ரீபார்வதி வித்தியாசாலை முன்)
[38808]



ஓம்
ஸ்ரீராம ஜயம்
யாழ்ப்பாணம் வண்ணை
ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்



# இரதோற்சவம் (தேர்)

இன்று 03 - 10 - 1995
செவ்வாய்க்கிழமை

* வசந்தமண்டப பூஜை காலை 8 மணி
* தேரில் சுவாமி ஆரோகணம் 10 மணி
* பிற்பகல் மானம்பு உற்சவம் 4-30 மணி

4-10-1995 புதன்கிழமை
காலை 10-00 மணிக்கு தீர்த்தோற்சவம்

-தேவஸ்தான ஆதீன மகாசபை.
[38809]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தேநீர் சாலைக்கு பாவித்த தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. கலைச்செல்வன், 31, நகர வீதி, யாழ்ப்பாணம். (38782)

நல்ல புதிய Honda Express Automatic Starter Model (Ladies), 2½ அடி சதுர இரும்புப் பெட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு; புதிய இல. 608, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (38806)

முதிரை, தேக்கம் பலகைகள், முதிரை நிலை, பாலை யன்னல்கள் மற்றும் திராந்திகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 1, சீனியர் ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (38807)

## உச்சப் புள்ளி பெற

மூன்றாம் தவணைத் தேர்வில் தமிழ்மொழிப் பாடத்திலே உச்சப்புள்ளி பெற துணைபுரியும் ஒரே ஒரு நூல்வரிசை "தமிழ் மொழி செயல் நூல்" ஆண்டு 8 தொடக்கம் ஆண்டு 11 வரை சிறி சுப்பிரமணிய பொத்தகக் களஞ்சியம், யாழ்ப்பாணம். (8654)

## தேவை

O/L கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு வீட்டில் வந்து கணிதம் / ஆங்கிலம் கற்பிப்பதற்கு அனுபவமுள்ள பெண் ஆசிரியை தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். இல. 305, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (38796)

பாலர் வகுப்பில் கல்வி கற்கும் மூன்று பிள்ளைகளை கல்வி கற்பிப்பதுடன் அவர்களது விளையாட்டு, பொழுதுபோக்கு என்பவற்றுக்கும் ஒத்துப் போகக்கூடிய ஆங்கில அறிவுடைய பெண் தேவை. இல. 305, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தபால் கந்தோருக்கு அருகில். (38797)

## மணப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் கம்பனியில் வேலை பார்க்கும் 31 வயது. ரேவதி, பாவம் குறைந்த, குற்றமற்றவருக்கு அரச சேவையிலுள்ள அல்லது படித்த பெண் தேவை. சைவ போசனமுடையவரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: த. இராமநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்), புஸ்பநாதன் வீதி, இணுவில். (38804)

# துருக்கியில் பூமியதிர்ச்சி; 100 பேர் பலி

அங்காரா, ஒக். 3

துருக்கியின் மேற்குப்பகுதியில் நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட பலத்த பூமி அதிர்ச்சியில் குறைந்தது 100 பேர் உயிரிழந்தனர் 100 பேர் வரை காயமடைந்தனர்.

றிச்சர் அளவுகோலில் 6 ஆக பதிவாகிய இந்த நில அதிர்வினால் பினார் நகரில் மூன்றில் இரண்டு பங்கு கட்டடங்கள் தரைமட்டமாகின. (ஐ)

# காந்தி பிறந்த தினம்

புதுடில்லி, ஒக். 3

மகாத்மா காந்தியின் 126 ஆவது பிறந்த தினம் நேற்று இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்டது. (ஐ)

---

# A/L 96

## கணித, உயிரியற் பிரிவு

பகல் முழுநேர வகுப்பு
மாலை இரவு நேர வகுப்பு

**ஆரம்பம்: 06 - 10 - 1995**

திரு. தில்லைநாதன், திரு. குமரன், திரு. ஞானி, திரு. வர்ணம் திரு. கெங்காதரன், திரு. ஐங்கரநேசன், திரு. குணம்.

★ அனுமதிகள் இன்று 03-10-95 காலை 9மணியிலிருந்து மாலை 5மணிவரை மாத்திரமே வழங்கப்படும்.

★ முழுப்பாடத்திட்டமும் மீட்டல் செய்யப்படும்.

★ பகல் முழுநேரவகுப்பில் பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும்.

**யூனிவேர்சல்** கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

(சி/2382)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 12 — 1939

மறைவு: 14 — 10 — 1994

## திருமதி பாலசிங்கம் சிவனேஸ்வரி

திதி: 03 – 10 – 1995

வாணியின் நாளில், வருகின்ற அன்னையே! உங்கள் வசந்த நினைவுகளை, அரும்புகள் நுகர்கின்றோம் வானமாய், தென்றலாய், வெண்ணிலவாய் - நீங்கள் வாழ்ந்த நாட்களை, வணங்கியே சுமக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்;
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(38803)

---

# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 05 — 08 — 1917

உதிர்வு: 03 — 10 — 1975

## திருமதி மேரி கிருபையம்மா இராஜக்கோன்

தன்னையே தேய்த்துத் தரும்
சந்தனம் உன்தன் உள்ளம்
மண்ணிலே ஒருவர் இல்லை
உனக்கிணை ஈடு சொல்ல

— அன்புப் பிள்ளைகள்

38/9 மருதடி வீதி,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(38801)

---

அச்சுவேலி
பனை, தென்னை வள
அபி. கூட். சங்கத்திற்காக வடமாகாண
தெங்குபனம் பொருள் கூட்டுறவுசங்கங்களின்
**சமாசத்தின் அறிவித்தல்**

1-10-1995 அன்று நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் முற்றாக இடம்பெயர்ந்துள்ள எமது அங்கத்துவ நிறுவனமான அச்சுவேலி பனை, தென்னை வள அபி. கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர்கள், பணியாளர்களை அவர்களது தற்போதைய நிலைமை பற்றி கலந்தாலோசிப்பதற்காக கோப்பாய் ப. தெ. வ. அ. கூ. சமாசத்தின் காரியாலயத்துக்கு 3-10-1995 காலை 10-00 மணிக்கு தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன். இக் கலந்துரையாடலில் கூ. அ. உ. ஆணையாளர் அவர்களும் கலந்து கொள்வார்.

சா. செல்வரட்ணம்
தலைவர்,
வட. தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
யாழ்ப்பாணம்.

(சி-2394)

---

# நல்லூர் லயன்ஸ் கழக அறிவித்தல்

மகரகமவில் புற்றுநோய் சிகிச்சைபெற செல்லும்

## நோயாளர் கவனத்திற்கு


புற்றுநோய், காரணமாக மகரகம ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறச் செல்வோருக்கு நல்லூர் லயன்ஸ் கழகம் கொழும்பில் வைத்திய வசதி, சமையல் செய்யும் வசதியுடன் நாளொன்றுக்கு ரூபா நூறு (100/-) செலுத்தி (மிகவும் வறிய நிலையில் உள்ளோருக்கு குறிப்பிட்ட அளவு உதவி கழகத்தால் ஒழுங்கு செய்யப்படும்) தங்குவதற்கு கொழும்பு இன்னர் லயன்ஸ் கழகத்துடன் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். நோயாளியுடன் பராமரிப்பவர் தங்குவதற்கும் ஒழுங்கு செய்து தரப்படும். குறிப்பிட்ட அளவு இடங்களே உள்ளதால் மேற்கூறிய வசதிகளை பெற விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

முகவரி: லயன் பா. தவபாலன்,
செயலாளர்,
81/5, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்.

(சி-2396)

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



நல்லூரைச் சேர்ந்த

## லயன். மகாதேவன் சோமசுந்தரம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஏற்றுமதி, இறக்குமதி திணைக்களம், பதிவாளர் நாயகம் அலுவலகம், சிலோன்பிறின்டேஸ் லிமிட்டெட், முன்னாள் செயலர் லயன்ஸ் கழகம், யாழ்ப்பாணம்)

மண்ணில்: 25 — 03 — 1926

விண்ணில்: 25 — 09 — 1993

திதி: 03 – 10 – 1995

"எல்லோரையும் அன்புடன் நேசித்தீர்கள்
எல்லோருக்கும் உதவுவதில் முன்நின்றீர்கள்
பாசமுடன் எங்களுடன் வாழ்ந்த நீங்கள்
பாதியிலே எம்மை விட்டு பிரிந்ததேனோ
ஆசையுடன் உங்கள் முகம் பார்ப்பதற்கு
காத்திருந்தோம் வந்துதித்து மறைந்ததேனோ
காத்திருப்போம் ஆவலுடன் மீண்டும் வருகவரையில்

மனைவி, பிள்ளைகள், பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
மைத்துனர், மற்றும் உறவினர்கள்.

82/5, நல்லூர் குறுக்கு தெரு,
நல்லூர்.

(2395)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
191/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## பிக்குமாரின் சமாதானம்!

நாட்டில் சமாதானம் தோற்றுவிக்கப்பட்ட பின்னரே அதிகாரப் பரவலாக்கல் பற்றிய கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும். சமாதானத்தை நிலைநாட்டுவதிலேயே முதலில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் ரம்புக்கல ஸ்ரீ விப்பாசி நாயக்க தேரர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவிடம் வற்புறுத்தி உள்ளார்.

மல்வத்தை பீடாதிபதியின் இந்தக் கருத்தை பிரதிப் பாதுகாப்பு அமைச்சரோ அல்லது ஜனாதிபதி சந்திரிகாவோ மொத்தத்தில் அரசாங்கமோ வெறும் வற்புறுத்தலாகக் கொள்ள முடியாது. அழுத்தமாகவே கொள்ள நேரிடும்.

அந்த அளவுக்கு பௌத்த மத குருமாரின் செல்வாக்கு ஸ்ரீலங்கா அரசியலில் மிக ஆழமாக வேரூன்றி இருக்கிறது. பௌத்த துறவிகள் — உலகப் பற்றுக்களைத் துறந்து, மக்கள் ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கு போதனை செய்ய வேண்டிய துறவிகள் — பற்றுகளிலேயே மோசமானதான ஆட்சியதிகாரப் பற்றுடைய அரசியலில் ஆதிக்கம் செலுத்துபவர்களாக இருக்கிறார்கள். இது இந்த நாட்டின் மிகப் பெரும் சாபக்கேடாகும்.

அரச போரை நிறுத்தி சமாதானத்தை உருவாக்க வேண்டும் என்று பீடாதிபதி சொல்லவில்லை. அதாவது போரைத் தொடர்ந்து அதில் வென்று சமாதானத்தை உருவாக்குமாறுதான் அவர் மறைபொருளாகச் சொல்கிறார்.

இந்தியப் பேரரசனான அசோகச் சக்கரவர்த்தி பெரும் போரில் வென்றான். அந்தப் போரில் குவியல் குவியலாக மக்கள் மடிந்து கிடப்பதைக் கண்டதும் மனம் சோர்ந்தான். தனக்கு இனிமேலும் ஆட்சி உரிமை அதிகாரம் வேண்டாம் என்று துறவு பூண்டான். மக்களிடையே அன்பைப் பரப்ப பௌத்த சமயத்தின் உதவியை நாடினான்.

ஆனால் அசோக மன்னன் இலங்கைக்குப் பரப்பிய பௌத்தத்தின் ஆமைக் குருக்களான பௌத்த பிக்குகள், இப்போது போர் தொடர வேண்டும் என்று சொல்கிறார்கள். போரின் ஊடாக சமாதானத்தைக் காணுமாறு அரசியல் வாதிகளைத் தூண்டுகிறார்கள்; அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கிறார்கள்.

போரினூடு சமாதானம் என்ற புதிய தத்துவத்தை ஜனாதிபதி சந்திரிகா பிரஸ்தாபித்து வருவது பௌத்த குருமாரின் ஆதரவு தமக்குப் பெரிதும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான்! அந்த நம்பிக்கை வீண் போகவில்லை, பார்த்தீர்களா?

சமாதானத்தை எதிர்க்கும் சக்திகளை இராணுவ ரீதியில் தோல்வியுறச் செய்யவே போர் நடைபெறுவதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் மல்வத்தை மகாநாயக்கரிடம் சொல்லியிருக்கிறார்.

தமிழர்கள் சமாதானத்தை ஒருபோதும் எதிர்க்கவில்லை. தமது உரிமைகளை அங்கீகரிக்காமல் உருவாகும் சமாதானம் தமக்குப் பயனற்றது என்பதே அவர்களின் நிலைப்பாடு.

இதனை, அண்ணன் தம்பிகளான தென்னிலங்கை பௌத்த குருமாரும், அரசியல் தலைவர்களும் ஒருபோதும் புரிந்து கொள்ளப் போவதில்லை; ஒப்புக்கொள்ளப் போவதும் இல்லை.

# பாதுகாப்பு செலவுக்கு அடுத்த ஆண்டு
# 3 ஆயிரத்து 397 கோடி ரூபா நிதி

கொழும்பு, ஒக். 3

அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு— 3 ஆயிரத்து 397 கோடி ரூபாவும்—

கல்வி அமைச்சுக்கு ஆயிரத்து 77 கோடி ரூபாவும் —

நிதி, திட்டமிடல், இன விவகார தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கு — 2 ஆயிரத்து 116 கோடி ரூபாவும் —

இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை, கிராமிய அபிவிருத்தி அமைச்சுக்கு — ஆயிரத்து 270 கோடி ரூபாவும் —

சுகாதார நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு — ஆயிரத்து 688 கோடி ரூபாவும் —

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டத்துறை அமைச்சுக்கு— ஆயிரத்து 838 கோடி ரூபாவும்—

உணவு, மாகாணசபைகள், சுதேச மருத்துவத்துறை அமைச்சுக்கு — ஆயிரத்து 777 கோடி ரூபாவும் — ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

(ஐ-3)

## பத்திரிகை உரிமையாளர் தெற்கில் சங்கம் அமைப்பு

கொழும்பில் உள்ள ஆறு பிரபல பத்திரிகை நிறுவனங்கள் சேர்ந்து பத்திரிகை உரிமையாளர் சங்கம் ஒன்றை நிறுவியுள்ளன.

லேக்ஹவுஸ், உபாலி நியூஸ் பேப்பேர்ஸ் லிமிட்டெட், எக்பிரஸ் நியூஸ்பேப்பேர்ஸ் லிமிட்டெட், விஜயா நியூஸ் பேப்பேர்ஸ் லிமிட்டெட், லீடர் பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட், சுமதி நியூஸ்பேப்பேர்ஸ் லிமிட்டெட் ஆகியன சேர்ந்து புதிய சங்கத்தை உருவாக்கி உள்ளன.

பத்திரிகைகளை பாதுகாப்பது பத்திரிகைச் சுதந்திரத்தைப் பேணுவது, அக்கறையுள்ள பொதுவான விடயங்கள் குறித்து அடிக்கடி தொடர்பு வைத்துக் கொள்வது என்பன இச்சங்கத்தின் பிரதான நோக்கங்களில் சிலவாகும். (அ)

## சட்டத்தின் திறவுகோல் சஞ்சிகை

யாழ்ப்பாணம், ஒக். 3

தமிழீழ நீதி நிர்வாகத்துறையினரால் வெளியீடு செய்யப்படும் "சட்டத்தின் திறவுகோல்" என்னும் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

இதில் தேசியத்தலைவரின் உரையிலிருந்து சீதனம் ஒரு சமூகச் சிறுமை, முகாமையில் தலைமைத்துவத்தின் முக்கியத்துவம். குடும்ப ஆலோசனை சபை, கோரக் காட்சி, தமிழீழ நீதிமன்றில் குற்றவியல் வழக்கு எப்படி நடைபெறுகின்றது, குற்றத்தண்டனை அன்றும், இன்றும், நீதி செலுத்துகையில் முதன்மை வகிக்கும் நடுவு நிலைமை, முறைமை பிறழா நீதி, ஆகிய கட்டுரைகளும் மற்றும் கேலி, பதில் கவிதைகள் ஆகிய சிறப்பு அம்சங்களுடன் வெளிவந்துள்ளது. [ஒ]

# தணிக்கையை நீக்குமாறு ல. ச. ச. கட்சி வற்புறுத்து

கொழும்பு, ஒக். 3

போர் நடவடிக்கைகள் சம்பந்தமான செய்திகளை வெளியிடுவதற்கு அரசாங்கம் விதித்துள்ள தணிக்கையை நீக்குமாறு லங்கா சமசமாஜக் கட்சி கேட்டுள்ளது.

லங்கா சமசமாஜக் கட்சி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் ஓர் அங்கத்துவக் கட்சி ஆகும்.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அரசாங்கத்தின் தணிக்கை நடவடிக்கையைக் கண்டித்துள்ளார்,

பாதுகாப்புப் பகுதியின் செயற்பாடுகள் சம்பந்தமான செய்திகளுக்குத் தணிக்கை விதிக்கப்பட்டுள்ளமை பொதுசனத் தொடர்புத் துறையின் பங்களிப்பை வெகுவாகப் பாதிக்கும் என்று அந்த அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் சம்பந்தமான செய்திகளைத் தணிக்கை செய்வதால் உருப்படியாக எவ்வித பயனுமில்லை —

செய்திகளை இருட்டடிப்புச் செய்வதால் பாதகமான விளைவுகளே உண்டாகும் — என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உலக நாடுகளின் எதிர்ப்பின் மத்தியில் தொடரும் பிரெஞ்சு அணுசோதனைகள்

தென்பசிபிக் சமுத்திரத்தில் பிரான்ஸ் நடத்தும் அணுப் பரிசோதனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரிஸில் ஆயிரக்கணக்கான மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் முக்கியத்துவம் உடையதோர் நிகழ்ச்சி என்று அவதானிகள் கருதுகின்றார்கள்.

ஏனென்றால் பிரெஞ்சு நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் 70 சதவீதத்துக்கு மேலானோர் அணுப்பரிசோதனைகளை எதிர்க்கின்ற போதிலும் அவர்கள் வெளிப்படையாக இப்பொழுதே முன்வந்துள்ளார்கள்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் பிரெஞ்சு அணுப்பரிசோதனைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், ராஜதந்திரத் தூதுவர்களை வாபஸ் பெறுதல், கண்டன அறிக்கைகள் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் பிரெஞ்சு ஜனாதிபதி இவற்றை எல்லாம் அலட்சியம் செய்து தமது அணுப்பரிசோதனைகள் திட்டமிட்டபடி தொடர்ந்து நடைபெறும் என்று பிடிவாதமாகக் கூறியுள்ளார்.

பிரெஞ்சு நாட்டு ஆயுத வலிமையை அதிகரிக்க இப்பரிசோதனைகள் அத்தியாவசியம் என்று ஜனாதிபதி சிராக் கூறியுள்ளார்.

இத்தடவை பிரான்ஸ் அதன் முதலாவது அணுப் பரிசோதனையை கடந்த செப்ரெம்பர் 5 ஆம் திகதி நடத்தியது.

பிரான்ஸின் தென் பசிபிக் மியுராரோ அணுபரிசோதனை நீர்ப்பிராந்தியத்தில் இந்த சோதனை நடந்தது.

கடலுக்கடியில்
வெடித்த அணு குண்டு

20கிலோ தொன் எடை கொண்ட அணுகுண்டு கடலுக்கடியில் வெடித்தபோது கடல் நீர் கொதித்து நுரைதள்ளி வெள்ளை நிறமாக மாறியது. பின்னர் கலங்கிய நீர் படிப்படியாகத் தெளிவடைந்தது.

பிரெஞ்சு அணுசக்தி விஞ்ஞானிகள் பரிசோதனை நடைபெற்ற வேளையில் தளத்தருகே குழுமி இருந்தனர்.

தளத்தின் மீது சூரியனின் ஒளி விழுந்திருந்த வேளையில் பரிசோதனைக் குண்டு வெடித்தது. அப்பொழுது தண்ணீர் கொதிப்பது போன்று நுரை கிளம்பியது. இதைக் கண்டு விஞ்ஞானிகள் கைதட்டி மகிழ்ந்தனர். வெப்பக்கதிர் ஒழுங்குபற்றி அவதானமாக இருந்த அவர்கள் அப்படி எதுவும் கடல் மட்டத்துக்கு மேலே இடம் பெறவில்லை என்று கூறினார்கள்.

இத்தடவை பிரான்ஸ் எட்டு அணுப் பரிசோதனைகளை நடத்த திட்டமிட்டிருக்கிறது.

இதில் இரண்டாவது சோதனை ஒக்ரோபர் முதலாம் திகதி நள்ளிரவு நடைபெற்றது ... முதலாவதிலும் பார்க்க இது 5 மடங்கு பெரியது.

பிரெஞ்சு
அணுசோதனைகள்

பிரெஞ்சு அணு சோதனைகள் நிறுத்தப்படுமென 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அப்பொழுதைய பிரெஞ்சு ஜனாதிபதி பிரான் கோயிஸ் மித்தரோன் தெரிவித்தார்.

1966 க்கும் 1972 ஏப்ரலுக்கும் இடையில் பிரான்ஸ் 41 அணு பரிசோதனைகளை நடத்தியிருந்தது. இவையாவும் பிரெஞ்சு பொலினேஷியன் அணுசோதனைத் தளத்திலேயே நடந்தன.

1995 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ஆம் திகதி பிரெஞ்சு ஜனாதிபதி ஜெக்கியூஸ் சிராக் பிரான்ஸ் எட்டு அணுப் பரிசோதனைகளை இவ்வாண்டு செப்ரெம்பருக்கும் அடுத்த ஆண்டு மே மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் நடத்தும் என்று அறிவித்தார். இதன்பின்னர் பிரான்ஸ் அணுப்பரிசோதனை தடை ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடும் என்று அவர் தெரிவித்தார்.

நியூசிலாந்து, அவுஸ்திரேலியா சிலி, அமெரிக்கா, ஜப்பான், டாஹிட்டி, நஹாஷ, வியட்நாம், ரஷ்யா ஆகிய நாடுகளில் பிரெஞ்சு அணுப்பரிசோதனையை நிறுத்தும்படி கோரி பல்வேறு வடிவப் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. கிறீன் பீஸ் இயக்கமும் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் முன்னணியில்

தொகுப்பு—
**பாரதிநேசன்**

## செய்தியின் பின்னணியில்

## முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

கடந்த புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சாவகச்சேரிப் பிரிவு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத் திறப்புவிழாவும், கலைத்திட்டத்திற்கமைவாகக் கழிவுப் பொருள்கள், விலை குறைந்த பொருள்களைக் கொண்டு உருவாக்கிய கற்றல் உபகரணக் கண்காட்சியும் கைதடி நுணாவிலில் இடம்பெற்றன.

சாவகச்சேரிப் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி கனகா தங்கராஜா தலைமை வகித்த இந்நிகழ்வில் தேசியக் கொடியை தென்மராட்சிக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. வெற்றிச் செல்வன் ஏற்றினார். பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச செயலர் திரு. சுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ புனர்வாழ்வு நிறுவனப் பொறுப்பாளர் திரு. சி. ரவியும், தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. வெற்றிச் செல்வனும் கலந்து கொண்டனர். (ஒ)

## புனர்வாழ்வு கழக அபிவிருத்தி வேலைகள்

யாழ்ப்பாணம், ஒக். 3

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நல்லூர்பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட நாவலடி, பூம்புகார், அரியாலை முனை ஆகிய கிராமங்களை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை பொறுப்பேற்றுள்ளது. ஆரம்பகட்டமாக மூன்று இடங்களுக்கும் பொதுவான அலுவலகம் ஒன்று பூம்புகாரில் அமைக்கப்பட்டு பாலர் பாடசாலைகள் புனர் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

இதே போல், மணிப்புரி கிராமத்தை வடக்கு- கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனமும், வசந்தபுரம், உதயபுரம் ஆகிய கிராமங்களை யாழ்ப்பாண அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனமும் பொறுப்பெடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் மேற்கூறிய வேலைத் திட்டங்களை ஒழுங்கமைத்துள்ளன. இம்மூன்று கிராமங்களுக்குமான பொதுவான அலுவலகம் மணிப்புரியில் உள்ளது. (க)

## பாதுகாப்பு நிதி இன்று செலுத்தலாம்

யாழ்ப்பாணம், ஒக். 3

அரியாலைப் பகுதியில் ஜே — 95, ஜே — 96, ஜே — 93, ஜே — 92 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு நிதி வழங்கத் தயாரான மக்கள் அனைவரும் இன்று செவ்வாய் காலை 9 30 மணி முதல் மாலை 4 30 மணிவரை கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் உள்ள பாதுகாப்பு நிதி தொடர்பகத்தில் தங்கள் பங்களிப்பை வழங்கி ஒத்துழைக்குமாறு நல்லூர் பாதுகாப்பு நிதி தொடர்பகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

2 ஆவது...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளில் பலர் காயமடைந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களால் கைவிடப்பட்ட கால்நடைகள் ஷெல் வீச்சுக்கு இலக்காகி காயமடைந்துள்ளன.

இரண்டாவது நாளாக வலி. கிழக்குப் பகுதியில் வழமை நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அல்பிரட் வேலுப்பிள்ளை தம்பிஐயா
(இளைப்பாறிய ஆசிரியர்)

கற்கோவளத்தைச் சேர்ந்த அல்பிரட் வேலுப்பிள்ளை தம்பிஐயா 02 - 10 - 95 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்வநாயகி அம்மாள் அவர்களின் அன்புக் கணவரும், சற்குணானந்தராஜா (தபால் திணைக்களம் மட்டக்களப்பு), தவராஜா (மலேசியா தடுப்பு இயக்கம்), இன்பராஜா [Light Engineering Enterprises Colombo], ஜீவராஜா (ஆவுஸ்திரேலியா), இராசசோதி, இராஜேஸ்வரி, இராசஞானம் (சிறுவர் பாலர் பாடசாலை மெதடிஸ்த திருச்சபை வண்ணார் பண்ணை), இராசமனோகரி (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மகாலிங்கம் (நில அளவை திணைக்களம், மட்டக்களப்பு), காலஞ்சென்ற சேவியர், தங்கத்துரை சாமுவேல் அன்சன்ஸ் கொம்பனி யாழ்ப்பாணம்), வேல்முருகு[தே.வீ.அ அ.சபை யாழ்ப்பாணம்] ஞானமலர், சீதாதேவி, கீதா, ரஞ்சனா (Australia) ஆகியோரின் மாமனாரும், குமுதினி (Care International, மட்டக்களப்பு), நந்தினி (மகாவலி அ. அ. திட்டம்). மதினி, ராஜ்குமார், சிவகுமார், தினேஷ், தர்ஷிகா, சுஜந்தன், சுஜந்தினி, வசந்தன், வசந்தினி, டிலாணி, டினோஜ், நிருஜன், டிலக்ஷன், நிஷாந்தினி, நித்தியா, சரணியா ஆகியோரின் அன்புப் பேரனும், சண்முகநாதனின் (நகரசபை பருத்தித்துறை) அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற இராசையா, சிவகாமி, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க இறுதி வழிபாடு இன்று 03 - 10 - 1995 பிற்பகல் 3-00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை அன்புடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
தங்கத்துரை (மருமகன்)
கற்கோவளம்,
பருத்தித்துறை.
[38801]

## மயில்வாகனம் அம்பலவாணர்
[முன்னாள் சுருக்கெழுத்தாளர், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை]

போயிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தெல்லிப்பழையிலும் பின்னர் தற்போது ஆஸ்பத்திரி வீதி மானிப்பாயில் வசித்தவருமாகிய மயில்வாகனம் அம்பலவாணர் 30-9-95 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மயில்வாகனம் - தையற்பிள்ளை தம்பதியினரின் மூத்தமகனும், சரஸ்வதியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளை, காலஞ்சென்ற கந்தப்பிள்ளை மற்றும் செல்லம்மா, காலஞ்சென்ற சின்னத்தங்கம் மற்றும் நாகநாதர், காலஞ்சென்ற இளையதம்பி, மற்றும் சரஸ்வதி, திருச்சிற்றம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னபூரணம், இராசம்மா, சிவசுப்பிரமணியம், ஆறுமுகநாதன், பரஞ்சோதி ஆகியோரின் மைத்துனரும், சிவபாலன், காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் ஸ்கந்தராசா [சவுதி], அருந்ததேவி (இலண்டன்), திருவருட்செல்வி [இலங்கை வங்கி, காங்கேசன்துறை], சத்தியசீலன் ஆகியோரின் அருமைத்தகப்பனாரும், கமலாதேவி, சிவதேவன் (இலண்டன்), ஜெகநாதன் [இலங்கை வங்கி, வெள்ளவத்தை] ஆகியோரின் அன்பு மாமனாரும், சாம்பவி, சங்கரி, சிரோன், வினோதினி சிந்துஜன், பவித்திரா, கோபிநாத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை [01-10-95] மானிப்பாயில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு பிப்பிலியயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அ. சிவபாலன்
[மகன்]
ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.
(38813)

## சின்னத்தம்பு முத்தம்மா

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், தற்போது தலையாளி யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய திருமதி சின்னத்தம்பு முத்தம்மா 01 - 10 - 95 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை சின்னத்தம்புவின் அன்பு மனைவியும், தர்மலிங்கம் (வர்த்தகர் கொழும்பு), அன்னலெட்சுமி [ஓய்வு பெற்ற ஆசிரியை], கனகலிங்கம் [பிரதேச செயலகம் நெடுந்தீவு], வரதலெட்சுமி [ஆசிரியை யா/ இளையதம்பி வித்தியாலயம்], Dr. சண்முகலிங்கம் (U. K) ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமேனி, காலஞ்சென்ற சேனாதிராசா, மதிவதனா, வீரசிங்கம் [அதிபர் புங்குடுதீவு அமெரிக்கமிஷன் வித்தியாலயம்], சந்திராதேவி (கட்டிடக் கலைஞர் U. K) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிறேமலதா - ஜெயக்குமார், கீதலதா- சாந்தமூர்த்தி, விஜயலதா - கெனடி, உதயலதா, வனிதா, நந்தினி -குமாரதேவன், சுஜீத்தா, சுனீத்தா, சுஜீவன், கிருஷாந்தன், தனுஜியா, டெஷாணி [U K] பிரதீப் [U K] ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் நிரோஜன், பிரஹரி, உஜாவந்தி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் 03-10-1995 பி. ப. 2-00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
திருமதி அ. சேனாதிராசா
[மகள்]
வைரவர் கோவிலடி,
தலையாளி.
[38812]

## படையினர் சூடு: மீனவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக்.3

பூநகரி கல்முனைக் கடற் பிராந்தியத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களில் ஒருவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொழும்புத்துறையைச் சேர்ந்த நல்லதம்பி சிவராசா [வயது 34] என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

[ஐ-13-15]

### ஆயிரக்கணக்கில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடையாகவும், சைக்கிள்கள், மாட்டு வண்டில்கள் என்பவற்றிலும் மூட்டை முடிச்சுக்களுடன் இடம்பெயர்ந்து சென்றனர்.

நுணாவில், மட்டுவில் சாவகச்சேரி, கொடிகாமம் மிருசுவில் ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொது இடங்களில் இடம்பெயர்ந்த மக்கள் நிரம்பிக் காணப்படுகின்றனர்.

ஞாயிறு மாலையும் இரவும் படையினர் ஏவிய ஷெல்கள் கைதடி நவபுரம், கோப்பாய் கடற்கரை, கைதடி தேவகி குடியிருப்பின் பின்னாலுள்ள வயல்வெளி ஆகிய இடங்களில் விழுந்து வெடித்ததையடுத்து கைதடிப் பகுதி மக்களும் அப்பகுதியில் தங்கியிருந்த ஏனைய பகுதி மக்களும் பீதியினால் சாவகச்சேரி கொடிகாமம், கச்சாய் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர்.

இவர்களைத் தங்க வைக்கும் நடவடிக்கைகளை தென்மராட்சி பிரதேச செயலகத்தினரும், தமிழர் புனர்வாழ்வுக் கழக தென்மராட்சி பிரிவினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

### ஆஸ்பத்திரி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

— தெரிவிக்கப்பட்டது.

இக் கப்பலில் சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலரும் யாழ்ப்பாணம் வருவதாகத் தெரிய வந்தது. [ஐ-3]

### தீவிர...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் மேற்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் சுசில் முனசிங்காவும் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

ஆனால் தாம் தொடர்ந்து ஐ. தே. க. உறுப்பினராக இருப்பதாகவும்—

தாம் மீண்டும் தீவிர அரசியலில் இறங்குவதை எவரும் தடுக்க முடியாது என்றும் — சிறிசேன குரே தெரிவித்துள்ளார். [இ]

### அச்சுவேலி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாக ஒப்புக் கொண்டுள்ளன.

புலிகளின் கடும் எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருப்பதாகவும்—

பீரங்கிக் குண்டுகளைக் கொண்டு புலிகள் தாக்கி வருவதாகவும்—

ஞாயிறு இரவு முழுவதும் புலிகள், அரசதரப்பு படைகள் மீது மோட்டார் தாக்குதலை நடத்தியதாகவும்—

பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ பேச்சாளர் கொழும்பில் தெரிவித்தார்.

கடும் சண்டை நடைபெற்று வருவதை "புலிகளின் குரல்" வானொலியும் நேற்றிரவு ஊர்ஜிதம் செய்தது.

அச்சுவேலி, தோப்பு, நவக்கிரி, வயாவிளான், புத்தூர், பத்தமேனி, ஆவரங்கால், இடைக்காடு, வல்லை பகுதிகளில் இராணுவ நடவடிக்கை ... செய்தி நிறுவனங்கள் அறிவித்தன.

(உ-3-6-15)

## வாழ்க்கைச் செலவுப் படி:
## அரச ஊழியர்களுக்கு நிலுவைப் பணம் கிடைக்கும்

ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கான 260 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி நிலுவைப் பணம் அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

1988 ஆம் ஆண்டில் இருந்து அரச ஊழியர்களுக்கு இந்த விசேட படி வழங்கப்பட்ட போதும் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படவில்லை.

புதிய அரசு பதவி ஏற்ற பின் 88 ஆம்ஆண்டில் இருந்து கிடைக்க வேண்டிய நிலுவை பணத்தில் ஆயிரத்து 300ரூபாவையும், பின்னர் 95 ஏப்ரலில் ஆயிரத்து 560 ரூபாவையும் வழங்கியிருந்தது.

இதில் எஞ்சிய தொகையை புதிய வரவு செலவுத் திட்டம் மூலம் அரசு வழங்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கிணற்றுக்குப்பலி

யாழ்ப்பாணம், ஒக்.3

கிணற்றில் தவறி விழுந்து மரணமானதாக வயோதிபப்பெண் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெரு பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த தியாகராசா பூமணி [72 வயது] என்ற வயோதிபப் பெண்ணே மரணமானவர் ஆவார்.

## சுசில் முனசிங்கா விரைவில் கட்சி மாறுவார்?

கொழும்பு, ஒக். 3

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணிப் பிரமுகர்களில் ஒருவரான சுசில் முனசிங்கா மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சிக்குத் தாவலாம் என்று சொல்லப்படுகிறது.

அரசாங்கத்தின் தீர்வு யோசனையைக் கடுமையாக எதிர்க்கும் ஐக்கிய தேசியக் கட்சிக் குழுவுக்கு இவர் தலைமை வகிக்கிறார்.

மேல் மாகாண சபையின் முன்னாள் முதல் மந்திரியான சுசில் முனசிங்கா மிகுந்த சிங்களத் தீவிரவாதியாக மாறி வருகிறார் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவருக்கு நெருங்கிய ஆதரவாளர்களாக ஐ. தே. கட்சி எம். பிக்கள் பத்துப் பேர் உள்ளனர் என்றும் கூறப்படுகிறது. [அ]

## ம. தி. மு. க உறுப்பினர் மரணம்

சென்னை, ஒக். 3

தமிழக சட்டப்பேரவையில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரேயொரு உறுப்பினரான ஆர். செல்வராஜன் (வயது 73) சென்னையில் நேற்றுக்காலை மானார்.

இவரது மறைவுக்கு ம. தி. மு.க தலைவர் வை.கோபாலசாமி அனுதாபம் தெரிவித்துள்ளார். [ஐ-3]

### ஸ்ரீமாவோ...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேரா நாடுகளின் தலைவி என்ற ஹோதாவில் திருமதி பண்டாரநாயக்காவுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. (இ)

## காயமடைந்த மூன்று பேர் சாவகச்சேரியில்

தென்மராட்சி, ஒக். 3

வலி. கிழக்குப் பகுதியில் ஷெல் வீச்சுக்கு இலக்காகி காயமடைந்தவர்களில் மூவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த கி. இராஜேஸ்வரி (வயது 33), க. கமலநாயகி (வயது 50) வி. கோகிலன் (வயது-3 ஆகியோரே அங்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ஐ-117]

# வீரச்சாவு

## ஆனந்தக்கிளி ஆனந்தசோதி
(கப்டன் எழிலரசன் / மோகன்ராம்)

பருத்தித்துறை வீதி மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆனந்தக்கிளி ஆனந்தசோதி கடந்த 01- 10 95 இல் வீரச்சாவடைந்துள்ளார்.

அன்னாரின் வித்துடல் கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய வீதியிலுள்ள இல்லத்திலிருந்து இன்று [3- 10- 95] காலை 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு நெல்லியடி சந்தியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
[38817]

## வயித்திலிங்கம் கர்ணன்
[கப்டன் ரங்கன் - அன்புக்குமரன்]

பொன்னாலையைச் சேர்ந்த வயித்திலிங்கம் கர்ணன் 1 - 10 - 95 அன்று வீரச்சாவு அடைந்துள்ளார். இவர் காலஞ்சென்ற இளையதம்பி - வயித்திலிங்கம், வயித்திலிங்கம் - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காண்டீபன், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், மங்களராணி, ரங்கநாதன், தேசமலர், மனோராணி, மோகனசுந்தரி, புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்திரசேகரத்தின் மைத்துனரும், குகதர்சினியின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 3 . 10 . 95 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பொன்னாலையில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்;
சிவகுரு சந்திரசேகரம்
[மைத்துனர்]
[38814]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03 - 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org